Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை,

பிறப்பிப்பவர் : திரு. ந. ரா. தியாகராஜன் பி.டெக்.

ந.க.எண்.1132/2021/ஈமா 3

நாள்: .11.2021

பொருள் : மனைப்பிரிவு-நகர் ஊரமைப்புத்துறை – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி வட்டம் – மொடக்குறிச்சி பேரூராட்சி மற்றும் கிராமம் – ரீ.ச.எண்கள். 724/2H2C,4–ல் 1.37 ஏக்கர் அல்லது 5540.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை :

1. மனுதாரர் திருமதி.கற்பகவடிவு சின்னம்மாள், கடிதம் நாள்.இல்லை இணையதளம் விண்ணப்பம் எண். 2021004011526 நாள்.05.03.2021 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.08.03.2021)
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுலகம், ஈரோடு மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண்.1132/2021/ஈமா 2 நாள்.19.4.2021
3. மனுதாரர் திருமதி.கற்பகவடிவு சின்னம்மாள் கடிதம் நாள்.8.10.2021 (சாலை பகுதிகள், மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.5313/2021 நாள்.18.8.2021 மற்றும் மின் பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO–பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்.5313/2021 நாள்.18.8.2021)
4. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(1)துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(1) துறை, நாள்.31.01.2020.
5. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.05.2017
6. வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்கள் கடிதம் எண். அ4/15/2021(66), நாள். 02.03.2021
7. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020
8. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
9. அரசாணை எண்.141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.23.09.2020
10. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017–1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.30.08.2017

58

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நா.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017
12. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.11.11.2021
13. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள். 12.11.2021

****

<u>உத்தரவு:</u>

1. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் சாலை பகுதிகள், மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.5313/2021 நாள்.18.8.2021 மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-விற்க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.5313/2021 நாள்.18.08.2021 மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஈமா எண்.348/2021 என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.10 (ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

89

சிறப்பு நிபந்தனைகள்

1. (a) பார்வை 7-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4-ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதி எனில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.31.1.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, Book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Rugulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி முன்இசைவு அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப முன்இசைவு அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

60

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

6. பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் நிலப்பயன்மாற்ற கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் மனுதாரரிடமிருந்து வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

கணக்குத் தலைப்பு

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts
AS Receipts under Land use conversion charges
27 Non Taxation fees – 09 collections
(DPC: 0217-60-800-AS-2790)

இணைப்பு:

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ./ஈமா எண். 348/2021 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் -3 தொகுப்பு
2. தானப்பத்திரம் எண். 5313/2021 அசல் ஆவணம்.

19/11/24

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

19/11/2024 19/11/24

பெறுநர்

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

நகல்: மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)

திருமதி.கற்பகவடிவு சின்னம்மாள்
99-B, காந்தி வீதி,
முத்தூர் மெயின் வீதி,
மொடக்குறிச்சி
ஈரோடு.

நகல்: (தகவலுக்காக)

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.1A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai – 600 008.

61

அனுப்புதல்

திரு.இரா.சுந்தரம்,
செயல்அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

பெறுதல்

சார்பதிவாளர் அவர்கள்,
சார்பதிவாளர் அலுவலகம்,
அவல்பூந்துறை.

ந.க.எண்.189/2020

நாள்.08.12.2021

அய்யா,

பொருள் – மனைப்பிரிவு ஒப்புதல் – ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி வட்டம்– மொடக்குறிச்சி பேரூராட்சி / மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ விஸ்தீரண பூமியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டது – மனைப்பிரிவில் உள்ள 18 மனைகளை பத்திரப்பதிவு செய்ய அனுமதி அளித்தல் – தொடர்பாக.

பார்வை –1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் கடிதம் ந.க.எண்.1132/2021/ஈமா–3, நாள்.19.11.2021 மற்றும் ம.வ/ஈமா எண்.348/2021 என எண்ணிட்ட மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

2. மொடக்குறிச்சி பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.189/2020, நாள்.08.12.2021.

பார்வை–1 மற்றும் பார்வை–2ல் காணும் ஆவணங்களின் அடிப்படையில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி, மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ விஸ்தீரண பூமியில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மனைப்பிரிவில் உள்ள 18 மனைகளை பத்திரப்பதிவு செய்ய ஆட்சேபணை ஏதுமில்லை எனவும், பத்திரப்பதிவு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது என்ற விபரத்தினையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

இணைப்பு

ஒப்புதல் வரைபட நகல் –1.

நகல்

திருமதி.கற்பகவடிவு சின்னம்மாள்,
99பி, காந்தி வீதி, மொடக்குறிச்சி.

மொடக்குறிச்சி பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.இரா.சுந்தரம்

ந.க.எண்.189/2020

நாள் :08.12.2021

பொருள் : மனைப்பிரிவு – ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி பேரூராட்சி – மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு – நகர் ஊரமைப்பு இயக்குநரால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது – மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.1132/2021/ஈமா3, நாள்.19.04.2021

2. அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலக தானசாசன எண்.5313/2021, நாள்.18.08.2021

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் கடிதம் ந.க.எண்.1132/2021/ஈமா–3, நாள்.19.11.2021 மற்றும் ம.வ/ஈமா எண்.348/2021 என எண்ணிட்ட மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

4. இளநிலைப் பொறியாளர், அவல்பூந்துறை பேரூராட்சி தொகுப்பு அவர்களின் சான்று நாள்.22.11.2021

5. மொடக்குறிச்சி பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.131/2021, நாள்.30.11.2021

6. மொடக்குறிச்சி பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.132/2021 நாள்.30.11.2021.

உத்திரவு

பார்வை 1இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதத்தில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொதுதிறவிடம் மற்றும் பூங்கா இடங்கள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2இல் காணும் அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலக தானசாசன ஆவணத்தின்படி ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள், சாலையின் மூலைமுடுக்குகள், பொது ஒதுக்கீடு இடங்கள் மற்றும் பூங்கா போன்றவை மொடக்குறிச்சி பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 3இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதத்தில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி கிராமம் வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/ஈமா எண்.348/2021ஆம் எண்ணாக மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4இல் காணும் இளநிலைப் பொறியாளர், அவல்பூந்துறை பேரூராட்சி தொகுப்பு அவர்களின் சான்றில் வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் சாலைகள், வடிகால்கள் மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5இல் காணும் மொடக்குறிச்சி பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் மனைப்பிரிவில் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பூங்கா மற்றும் பொதுதிறவிடங்களை ஏற்றுக் கொண்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 6இல் காணும் மொடக்குறிச்சி பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் மனுதாரரிடம் உரிய தொகையினை வசூலித்துக் கொண்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இம்மனைப்பிரிவிக்கு இறுதி அங்கீகாரம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் தெருவிளக்கு அமைக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டுத் தொகை ரூ.391470/– மற்றும் தெருவிளக்கு உபகரணங்களுக்கான தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2H2C, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு தொகை ரூ.351890/–ஐ ரொக்கமாக பேரூராட்சிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு மாவட்டம் அவர்களது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அங்கீகார நிபந்தனைகளுக்கு உட்பட்டும், மொடக்குறிச்சி பேரூராட்சி மன்ற தீர்மான அங்கீகாரத்தின் அடிப்படையிலும் மொடக்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி கிராமம், வார்டு எண்.12, கவுண்டன்புதூர் பகுதியில் ரீ.ச.எண்.724/2ஹ2ஊ, 4–இல் 1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ பரப்பில் செந்தமிழ் நகர் என்னும் பெயரிடப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 18 மனைகளை விற்பனை செய்ய அதன் உரிமையாளர் திருமதிகற்பகவடிவு சின்னம்மாள், 99பி, காந்தி வீதி, மொடக்குறிச்சி என்பவருக்கு 1920ஆம் ஆண்டு நகராட்சி சட்ட வழிகளின் படி கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

<u>தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம்</u>

1. மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	–	1.37 ஏக்கர் (அ) 5540.00 ச.மீ
2. கோரிய மனைகள்	–	21
3. ஒதுக்கிய மனைகள்	–	18
4. பொது உபயோகம் (பேரூராட்சிக்கு ஒப்படைத்தது)	–	24.54 ச.மீ
5. மின்வாரிய உபயோகம் (பேரூராட்சிக்கு ஒப்படைத்தது)	–	27.17 ச.மீ
6. சாலைகள் (பேரூராட்சிக்கு ஒப்படைத்தது)	–	2241.75 ச.மீ

<u>நிபந்தனைகள்</u>

1. மனைகள் மற்றும் தெருக்கள் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மவ/ஈமா எண்.348/2021இல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகளின் படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட்டுள்ளதை நகர் ஊரமைப்பு துறையிடம் அனுமதி பெறாமல் மாற்றம் செய்யக்கூடாது.

67

2. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.31.01.2020இன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019–ல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

4. நகர் ஊரமைப்பு துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனைகளை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்கான தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019–இல் குறிப்பிட்டுள்ள Residentialuse–ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்புத் துறையின் முன்அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்படும்.

6. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலத்தினை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தக்கூடாது.

7. மனையின் ஊடே குறைந்த அழுத்த / மின்கம்பி பாதை / அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

8. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Executive authority)யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

9. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியில் தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

10. 7.20 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல்அலுவலரிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

12. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெறவேண்டும்.

13. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அளவிலான நிரந்தர நகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும். மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

14. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமம் குறித்து பரிசீலக்கப்படுகிறது. எனவே உண்மையின் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

15. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

16. மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

17. தள பரப்பு குறியீட்டு எண். (FSI) TNCDBR 2019இன் படி அனுமதிக்கலாம்.

18. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23அடி) மற்றும் 9 மீட்டர் (30 அடி) அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.5 மீட்டரும் (5அடியும்), 12 மீட்டருக்கு (40 அடிக்கு) மேல் மற்றும் 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்குட்பட்ட சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்) 15 மீட்டர் (50 அடி) அகலத்திற்கு மேலும் 24 மீட்டர் (80அடி) அகலம் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டட விதிகளின் படி மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 1.8 மீ(6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் படி 2.4 மீ (8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச் சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டமோ சுவரோ கட்டுதல் கூடாது.

19. மனையின் பக்க எல்லைக்கும் கட்டத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுகள் திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறந்தவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

20. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 2 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும்.

21. விரிவு அபிவிருத்தி திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது. கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாக திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்.

22. பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தினை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

69

23. மனைப்பிரிவு உரிமையாளர்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திர, பொது அதிகார ஆவணம் மேலும் பல) ஆவணங்களின் மூலம் விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் சொத்தினை வாங்க விரும்புவோர் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையினை தனியாக உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும், அதன் மீது வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய இவ்வலுவலகம் பொருத்தமான அமைப்பு அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

24. 1894ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நில சீர்திருத்தச்சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்மனைப்பிரிவுக்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின் அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

25. நில ஆர்ஜிதம் தொடர்பாக நிலஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்கு பெறப்படவில்லை என்பதால் இம்மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. பின்னாளில் இது தொடர்பாக புகார்கள் ஏதும் வரப்பெறின் சம்மந்தப்பட்ட உரிமையாளரே பொறுப்பாவார்.

26. மேற்காணும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்தமைக்கு தணிக்கையில் ஏதேனும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு இழப்பு தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டால் அதனை ஒரே தவணையில் உடனடியாக செலுத்த வேண்டும்.

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

08 DEC 2021

8.12.2021

இணைப்பு


நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு.
அவர்களது கடிதம் மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.

பெறுதல்.

திருமதி.கற்பகவடிவு சின்னம்மாள்,
99பி, காந்தி வீதி, மொடக்குறிச்சி.

நகல்

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
அரசினர் தொழிற்பயிற்சி மையம் எதிரில்,
சென்னிமலை ரோடு, ஈரோடு–9.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate